# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
# அசல் வழக்கு எண்.327/2018

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06–ம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 06.11.2023 | தந்தை/கணவர் பெயர்: | திருஞானம் |
| பெயர்: | தமிழ்செல்வி (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | வழுதலைக்குடி | சமயம்: | |
| சாதி: | | வயது : | 60/2023 |
| தொழில்: | | | |

<u>**முதல் விசாரணை : 06.11.2023.**</u>

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

30.08.1998–ல் தேதியிட்ட போக்கிய உடன்படிக்கை பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 16.09.2001 தேதியிட்ட 1–ம் பிரதிவாதி தொகை பெற்றுக்கொண்டு எழுதி கொடுத்த ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 2–ம் பிரதிவாதி என் கணவர் மீது நாகப்பட்டினம், நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் அனுப்பிய காவல்

துறை அழைப்பாணையின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 06.09.2018–ல் எனது கணவர் கொடுத்த புகாரின் உண்மைநகல் மற்றும் புகார் ஏற்பு ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 11.09.2018 தேதியிட்ட எனது கணவர் கொடுத்த மனு மீது சார் பதிவாளர் சீர்காழி பிறப்பித்த உத்தரவின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 18.12.2018 தேதியிட்ட தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் காவல் துறையிடமிருந்து பெறப்பட்ட தகவலின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 21.09.2018–ல் எனது கணவர் 1, 2 பிரதிவாதிகளின் மீது கொடுத்த புகாரின் உண்மைநகல் மற்றும் புகார் ஏற்பு ரசீதின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.7. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 15.06.2018 தேதியிட்ட நில அபகரிப்பு தடுப்பு பிரிவு வழங்கிய விசாரணை முடிவு அறிக்கையின் உண்மைநகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.8. ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.